தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

ஆனி 17, பிரஜோற்பத்தி—திருவள்ளுவர் ஆண்டு 2022

1991 ஜூலை 1, திங்கட்கிழமை

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தலைமையில் 9-30 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) :

"குடிதழீஇக் கோலோச்சும் மாநில மன்னன்
அடிதழீஇ நிற்கும் உலகு".

குடிகளை அன்போடு அணைத்துக் கொண்டு, செங்கோல் செலுத்துகின்ற அரசனுடைய அடியைப் பொருந்தி, உலகம் நிலை பெறும்.

1. உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ளுதல்.

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்*): மாண்புமிகு உறுப்பினர்களே, ஜூன் திங்களில் நடைபெற்ற பத்தாவது பொதுத் தேர்தலில், இந்திய மக்கள் வியக்கும் அளவில் பெரும்பான்மை வெற்றியினைக் குவித்து மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தமிழகத்தின் முதல் பெண் முதலமைச்சர் (மேசையைத் தட்டும் ஒலி) என்ற புதிய சரித்திரத்தை ஏற்படுத்திய மாண்புமிகு முதல்வர் அவர்களையும், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் உறுப்பினர்களாக வந்திருக்கும் உங்கள் அனைவரையும் பேரவையின் இந்த முதல் கூட்டத்திற்குப் பெருமகிழ்ச்சியுடன் வரவேற்கிறேன். அமைதியாகத் தேர்தல் நடைபெறுவதற்கு ஒத்துழைத்த பொதுமக்கள், அதிகாரிகள் அனைவருக்கும் இம்மன்றத்தின் சார்பில் நன்றியையும், பாராட்டுதல்களையும் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*தற்காலிகப் பேரவைத் தலைவராக ஆளுநரால் நியமிக்கப்பெற்ற சட்டமன்றப் பேரவை உறுப்பினர் மாண்புமிகு திருமதி ஏ.எஸ். பொன்னம்மாள் அவர்கள் 1991ஆம் ஆண்டு, ஜூன் திங்கள் 26ஆம் நாள், 17-15 மணிக்கு, கிண்டியிலுள்ள ஆளுநர் மாளிகையில், ஆளுநர் முன்னிலையில் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள்.

பொதுமக்களால் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம், மக்களுக்காக அவர்களின் பிரதிநிதிகளாக அவர்களுக்குத் தொண்டாற்ற மிகப் பெரும் பொறுப்பினை ஏற்று, இன்று தேர்ந்தெடுக்கப்பட்டு வந்துள்ளோம். உறுப்பினர்கள் அனைவரும் இதனைக் கருத்தில் கொண்டு, பேரவையில் பணியாற்ற வேண்டியது நமது கடமை என்பதை அனைவரும் ஏற்றுக்கொள்வீர்கள் என்று நம்புகிறேன்.

சிறப்புமிக்க இப்பேரவைக்கு ஒரு தலைவரை இப்பேரவை தேர்ந்தெடுக்கின்ற வரையில் செய்ய வேண்டிய முன் அலுவல்களை நிறைவேற்றுவதற்கென, என்னை இப்பேரவையின் தற்காலிகத் தலைவராக ஆளுநர் அவர்கள் நியமித்திருக்கிறார்கள். அதற்காக அவருக்கு எனது உளங்கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவைக்கு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள நாம், இப்பேரவையின் அலுவல்களை ஏற்று நடத்துவதற்கு முன், இந்திய அரசமைப்புச் சட்டப்படி அதற்குரிய உறுதிமொழியை எடுத்துக் கொள்ள வேண்டும். அந்த உறுதிமொழி ஏற்பு நிகழ்ச்சியை, இன்று நிறைவேற்றுவதற்காக ஆளுநர் அவர்கள் என்னைப் பணித்துள்ளார்கள்.

முதலில், மாண்புமிகு முதல் அமைச்சர் மற்றும் அமைச்சர்கள் ஆகியோரையும், பிறகு தேர்தல் முடிவுகள் அரசிதழில் அறிவித்துள்ளபடி, அவையின் விதிகளுக்கு ஏற்ப சட்டமன்றக் கட்சியாகத் தகுதிபெற்ற கட்சித் தலைவர்களையும், அடுத்து முன்னாள் அமைச்சர்களையும், பிறகு உறுப்பினர் பெருமக்களையும், அவர்கள் பெயர்களின் தமிழ் அகர வரிசைப்படி, பதவிப் பிரமாணம் அல்லது உறுதிமொழி எடுத்துக் கொள்ள சட்டமன்றப் பேரவைச் செயலாளர் அழைப்பார். அவ்வாறு அழைக்கப் பெற்றவுடன் ஒவ்வொருவராக வந்து, தங்கள் தேர்வுக்கான சான்றிதழைச் சட்டமன்றப் பேரவைச் செயலாளரிடம் கொடுக்க வேண்டும்.

உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கான வாசகங்கள் அடங்கிய இதழ், உறுப்பினர்களுக்கு அளிக்கப்படும்; அதில், "உளமார உறுதி கூறுகிறேன்" என்றும், "கடவுளறிய உறுதி கூறுகிறேன்" என்றும் இரண்டு வாசகங்களும் இருக்கும். அவரவர் விருப்பப்படி, ஏதாவது ஒருமுறையில் உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். மேலும், இந்த இதழ், தமிழ மற்றும் ஆங்கிலம் ஆகிய இரு மொழிகளிலும் இருக்கும். மாண்புமிகு உறுப்பினர்கள், தம் விருப்பப்படி ஏதாவது ஒரு மொழியில் (அதாவது தமிழ் அல்லது ஆங்கிலத்தில்) உறுதிமொழி எடுத்துக் கொள்ளலாம். உறுதிமொழி எடுத்துக் கொள்ளும்போது, கொடுக்கப்படும் இதழில் உள்ள வாசகங்களை மட்டுமே படிக்க வேண்டும். அதைக் கூட்டவோ, குறைக்கவோ கூடாது.

1991 ஜூலை 1] [தற்காலிகப் பேரவைத் தலைவர்]

உறுதிமொழி எடுத்துக்கொண்டபின், உறுப்பினர்கள் அந்தப் படிவத்தில் கையெழுத்திட்டுச் செயலாளரிடம் கொடுக்கவேண்டும். அதற்குப் பிறகு, இங்கு வைக்கப்பட்டுள்ள '' உறுப்பினர் பதிவேட்டில் '' கையொப்பம் இடுதல் வேண்டும்.

அரசமைப்புச் சட்டப்படி எடுக்கப்பட வேண்டிய உறுதி மொழியை நான் ஏற்கெனவே, 26—6—1991 அன்று ஆளுநர் முன்னிலையில் எடுத்துக்கொண்டுவிட்டபடியால், இப்போது நான் முதலில், '' உறுப்பினர் பதிவேட்டில் '', விதிகளில் குறித்துள்ளபடி, அவைச் செயலாளர் முன்னிலையில் கையெழுத்திடுகிறேன். (கையெழுத்திட்டார்.)

உறுதிமொழி எடுக்கும் கடமை மிகவும் புனிதமானது. எனவே, உறுதிமொழி எடுக்கும் நிகழ்ச்சி முழுவதும் நிறைவேறும்வரை எல்லா உறுப்பினர்களும் பேரவையில் அமைதியாக அமர்ந்து இருக்குமாறு அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

தற்போது, மாண்புமிகு அமைச்சர்களைத் தவிர, மற்ற உறுப்பினர்களுக்குப் பேரவையில் அமருவதற்குத் தனி இடம் ஒதுக்கப்படவில்லை. 3—7—1991-ஆம் தேதியில் தேர்ந்தெடுக்கப்பட இருக்கிற பேரவைத் தலைவர் அவர்கள், பேரவை விதிகளின்படி, உறுப்பினர்களுக்கு இடங்களை ஒதுக்கித் தருவார்கள்.

நாளை மறுநாள், அதாவது 3—7—1991 அன்று பேரவைத் தலைவர், பேரவைத் துணைத் தலைவர் தேர்தல்கள் இப்பேரவையில் நடைபெறும். அதற்கான வேட்புத் தாள்களை நாளை நண்பகல் 12 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டும். சட்டமன்றப் பேரவை விதிகளின்படி, பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல்களில் கலந்துகொள்ளும் வேட்பாளர்களும், அவர்களை முன்மொழிபவர்களும், வழிமொழிபவர்களும் உறுதிமொழி எடுத்திருக்க வேண்டும்.

இப்போது, உறுதிமொழி எடுத்துக்கொள்வதற்கு உறுப்பினர்களை அவர்களது பெயர்களைச் சொல்லி செயலாளர் அழைப்பார்.

(பின்னர் செயலாளர், உறுப்பினர்களை உறுதிமொழி எடுத்துக்கொள்ளும்படி அழைத்தார்.)

கீழ்க்கண்ட உறுப்பினர்கள் உறுதிமொழி எடுத்துக்கொண்டார்கள் :

1. மாண்புமிகு செல்வி ஜெ. ஜெயலலிதா
2. மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன்*
3. மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி
4. மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம்

5. மாண்புமிகு திரு. க. இராசாராம்
6. மாண்புமிகு டாக்டர் செ. அரங்கநாயகம்
7. மாண்புமிகு திரு. சு. முத்துசாமி
8. மாண்புமிகு திரு. கே. ஏ. செங்கோட்டையன்

9-45 மணி

9. மாண்புமிகு திரு. இ. மதுசூதனன்
10. மாண்புமிகு திரு. எஸ். கண்ணப்பன்
11. மாண்புமிகு திரு. அழகு திருநாவுக்கரசு
12. மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்
13. மாண்புமிகு திரு. டி. எம். செல்வகணபதி
14. மாண்புமிகு திரு. முகமது ஆசிப்
15. மாண்புமிகு திருமதி இரா. இந்திர குமாரி
16. மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்
17. மாண்புமிகு திரு. டி. ஜெயக்குமார்
18. திரு. கா. ப. பட்டாபிராமன்
19. திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியன்
20. திரு. ச. இராமச்சந்திரன்*

10-00 மணி

21. திரு. எஸ். திருநாவுக்கரசு*
22. திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்
23. டாக்டர் இ. இராமகிருஷ்ணன்
24. திரு. எஸ். அண்ணாமலை
25. திரு. எம்.எம்.எஸ். அபுல்ஹசன்
26. திரு. ஓ. எஸ். அமர்நாத்
27. டாக்டர் மு. அம்மமுத்து பிள்ளை
28. திரு. ஆர். டி. அரங்கநாதன்
29. திரு. க. அர்ச்சுனன்
30. திரு. ச. அழகிரி*
31. திரு. ஆ. அறிவழகன்
32. திரு. எஸ். அன்பழகன்
33. திரு. எஸ். ஆசைமணி
34. திரு. மெ. ஆண்டி அம்பலம்
35. திரு. சி. ஆண்டித் தேவர்
36. டாக்டர் ச. ஆரோக்கியசாமி
37. திரு. செ. ஆறுமுகம்.

10–15 மணி

38. திரு. க. வெ. வீ. இராசமாணிக்கம்
39. திரு. சோ. இராசாராமன்
40. திரு. த. க. இராதாகிருஷ்ணன்
41. திரு. கே. ஆர். இராமசாமி அம்பலம்
42. திரு. சி. இராமசுவாமி.
43. திரு. எம். எஸ். எம். இராமச்சந்திரன்
44. திரு. ஓ. ஆர். இராமச்சந்திரன்
45. திரு. எஸ்.எஸ். ஆர். இராமதாஸ்
46. திரு. ஆர். இராமநாதன்
47. திரு. எஸ்.ஏ. எக்ஸ். இராஜமன்னார்
48. திரு. கி. இராஜன்பாபு என்கிற தணிகைபாபு
49. திரு. என். ஆர். இராஜேந்திரன்
50. திருமதி இலதா பிரியகுமார்†
51. திரு. பி. ஈஸ்வரமூர்த்தி

10–30 மணி

52. திரு. ஆர். ஈஸ்வரன்
53. திரு. ஏ. ஏகாம்பர ரெட்டி
54. திரு. வே. கண்ணன்
55. திரு. கா. கந்தசாமி
56. டாக்டர் எம். கருப்புசாமி
57. திரு. பி. கலியபெருமாள்
58. திருமதி கே. எம். கலைச்செல்வி
59. திருமதி கவிநிலவு தர்மராஜ்
60. திருமதி மு. கற்பகம்
61. திருமதி என். சி. கனகவல்லி
62. திரு. காஞ்சி பன்னீர்செல்வம்
63. திரு. ச. காந்திராஜன்
64. திரு. ஜி. காளன்*
65. டாக்டர் மு. காளிராஜன்
66. திரு. எஸ். எம். கிருஷ்ணன்*

10-45 மணி

67. திரு. சி. கிருஷ்ணன்
68. திரு. கே. குப்பன்

69. திரு. குமரி அனந்தன்
70. டாக்டர் தே. குமாரதாஸ்
71. திரு. சி. குழந்தைவேலு
72. திரு. ஆர். கோடி மாரி
73. திரு. வே. கோபாலகிருஷ்ணன்
74. திரு. க. கோபால்
75. திரு. எம். கோவிந்தராஜுலு
76. திரு. பா. கோவிந்தராஜ்
77. திருமதி ஆர். சக்குபாய்
78. திருமதி டி. சக்குபாய் தேவராஜ்
79. திரு. சஞ்சய் ராமசாமி
80. திரு. எஸ். சண்முகநாதன்
81. திரு. எஸ். வி. சண்முகம்*
82. திரு. வ. சத்தியமூர்த்தி
83. திரு. வி. பி. சந்திரசேகர்

11-00 மணி

84. திரு. எ. சம்பத்
85. திருமதி ஏ. டி. சரஸ்வதி
86. திருமதி ப. சரஸ்வதி
87. டாக்டர் (திருமதி) வெ. சரோஜா
88. திரு. டி. சாத்தையார்
89. திருமதி ஆர். சாவித்திரி அம்மாள்
90. திரு. ஆர். சிங்காரம்
91. திரு. கே. சிங்காரம்
92. திருமதி ஆர். சியாமளா
93. திரு. கு. சிவசுப்பிரமணியன்
94. திரு. என். ஆர். சிவபதி
95. திரு. ம. சின்னசாமி
96. திரு. கா. சின்னசாமி
97. திரு. வி. கே. சின்னசாமி
98. திரு. கே. கே. சின்னப்பன்

11-15 மணி

99. டாக்டர் (திருமதி) மு. சீனியம்மாள்
100. திரு. ஆ. கு. சீனிவாசன்*
101. திரு. கு. சீனிவாசன்

LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

102. திரு. டி. சுதர்சனம்
103. திரு. எம். சுந்தரசாமி
104. திரு. மா. சுந்தரதாஸ்†
105. திரு. எம். கே. சுந்தரம்*
106. டாக்டர் சா. சுந்தரராஜ்
107. திரு. ஏ. கே. சி. சுந்தரவேல்
108. திருமதி செ. சுந்தராம்பாள்
109. திரு. வி. எம். சுப்பிரமணியன்
110. திரு. வி. என். சுப்பிரமணியன்
111. திரு. வீ. சுப்பிரமணியன்
112. திரு. ஏ. சுப்புரத்தினம்
113. திரு. சி. சுவாமிநாதன்
114. செல்வி எல். சுலோசனா

11-30 மணி

115. டாக்டர் அ. செல்லக்குமார்
116. திரு. ஏ. டி. செல்லசாமி
117. திரு. ஆ. செல்லத்துரை
118. திரு. கி. செல்வராஜ்
119. திரு. தா. செழியன்
120. டாக்டர் எம். பி. சேகர்
121. திரு. எம். ஜி. சேகர்
122. திரு. பி. சொக்கலிங்கம்
123. திரு. சி. ஞானசேகரன்
124. திரு. எஸ். டேனியல்ராஜ்
125. திரு. கே. தங்கமுத்து
126. திரு. ஆர். தங்கராஜ்
127. திரு. வி. தண்டாயுதபாணி
128. திரு. செ.கு. தமிழரசன்*
129. திரு. வெ. தமிழரசு
130. திரு. வி. தம்புசாமி*
131. திரு. கி. தருமலிங்கம்*

11-45 மணி

132. திரு. பே. தர்மலிங்கம்
133. திரு. கே. தவசி
134. திரு. ம. தனபால்

135. திரு. இரா. தாமரைக்கனி*
136. திரு. சி. தாமோதரன்
137. திரு. எஸ். எம். துரை
138. திரு. கே. எஸ் . துரைமுருகன்
139. திரு. துரை ராமசாமி
140. திரு. எ. தெய்வநாயகம்
141. திரு. மு. தென்னவன்
142. திரு. அ. தேவராஜ்
143. திரு. மு. நடேசன்
144. திரு. வி. நடேசன் பால்ராஜ்
145. திரு. சை. நாகூர் மீரான்
146. செல்வி பி. நிர்மலா
147. திருமதி கே. பஞ்சவர்ணம்

12-00 மணி

148. டாக்டர் ஜெ. பரந்தாமன்
149. திரு. ஆர்.பி. பரமசிவம்
150. திரு. அ. மா. பரமசிவன்
151. திரு. உ. பலராமன்*
152. திரு. இரா. பழனிசாமி
153. திரு. நா. சா. பழனிசாமி
154. திரு. க. பழனிசாமி
155. திரு. வெ. பழனிசாமி
156. திரு. ஜி. பழனிசாமி*
157. திருமதி கே. பழனியம்மாள்
158. திரு. என். பன்னீர்செல்வம்
159. திரு. சா. பன்னீர்செல்வம்
160. திரு. வெ. பன்னீர்செல்வம்
161. திரு. ஜெ. பன்னீர்செல்வம்
162. திருமதி இரா. பாண்டியம்மாள்
163. திரு. அ. பாப்பா சுந்தரம்

12-15 மணி

164. திரு. ஜெ. பாலகங்காதரன்
165. திரு. சோ. பாலகிருஷ்ணன்
166. திரு. கே. பாலசுப்பிரமணியன்
167. திரு. எம். கே. பாலன்

168. திரு. ஆ. பாலையா
169. திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்
170. திரு. இரா. புதுநயினார் ஆதித்தன்
171. திரு. ச. புரட்சிமணி
172. டாக்டர் வெ. புருஷோத்தமன்
173. திரு. எம். பூராசாமி
174. திரு. வே. பெரியசாமி
175. திரு. எம். பெரியவீரன்
176. திரு. செ. பெருமாள்*
177. பேராசிரியர் க. பொன்னுசாமி
178. திரு. பெ. பொன்னுசாமி*
179. திரு. எ. தா. பொன்னுவேலு
180. திரு. போளூர் வரதன்*

12-30 மணி

181. டாக்டர் (திருமதி) க. மணிமேகலை
182. திருமதி வி. ஜி. மணிமேகலை
183. திரு. கே. பி. மணிவாசகம்
184. திருமதி கே. மரியமுல் ஆசியா
185. செல்வி ஜி. மல்லிகா
186. திரு. கே. ஏ. மனோகரன்*
187. திரு. சி. மாணிக்கம்
188. டாக்டர் (செல்வி) ஜி. ஆர். மாலா
189. திரு. இரா. முத்தையா
190. திரு. கே. ஆர். முருகானந்தம்
191. திரு. ஆர். முருகையா பாண்டியன்
192. திரு. ஏ. எம். முனிரத்தினம்
193. திரு. கே. முனிவெங்கடப்பன்*
194. திரு. கா. பூ. முனுசாமி
195. திரு. டி. மூர்த்தி
196. திரு. செ. ரகுபதி
197. திரு. ப. ரங்கநாதன்
198. திரு. டி. எம். ரங்கராஜன்

12-45 மணி

199. திரு. த. ரத்தினவேல்
200. திருமதி ரமணி நல்லதம்பி
201. திரு. வி. பி. ஆர். ரமேஷ்
202. திரு. ஏ. ரவிக்குமார்
203. திரு. வி. ரவிச்சந்திரன்

சட்டமன்றப் பேரவை LEGISLATIVE ASSEMBLY வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

204. திரு. எஸ். எஸ். ராமசுப்பு
205. திரு. எச். எம். ராஜு
206. திரு. கே. ஆர். ராஜு
207. திரு. கே. பி. ராஜு
208. திரு. வி. கே. லட்சுமணன்
209. திரு. கு. லாரன்ஸ்
210. திருமதி ஜெ. லோகாம்பாள்
211. திரு. செ. து. வரதராஜன்
212. திரு. ஜி. விசுவநாதன்*
213. டாக்டர் பெ. வீரபாண்டியன்*
214. திரு. மு. வெங்கடராம ரெட்டி†
215. திரு. பி. ஆர். எஸ். வெங்கடேசன்
216. திரு. த. வேடியப்பன்*

13-00 மணி

217. திரு. என். ஜி. வேணுகோபால்
218. திரு. டி. வேலையா
219. திரு. தே. ஜனார்த்தனன்
220. திரு. கோ. ஞானகிராமன்
221. திருமதி ஜீனத் ஷெர்புதீன்
222. திரு. எஸ். ஜெயக்குமார்
223. திரு. எஸ். ஆர். ஜெயராமன்
224. டாக்டர் ஜெய்சன் ஜேக்கப்
225. டாக்டர் அ. ஸ்ரீதரன்

மாண்புமிகு தற்காலிகப் பேரவைத் தலைவர் : (திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள்) : இன்று சட்டமன்றத்திற்கு வந்திருக்கின்ற மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் உறுதிமொழி எடுத்துக்கொண்டுவிட்டார்கள் என்று நான் கருதுகின்றேன். நாளை பேரவைக் கூட்டம் இல்லை. நாளை மறுநாள் பேரவைத் தலைவர், துணைத் தலைவர் தேர்தல் நடைபெறும் என்பதையும், அதற்கான வேட்பு மனுக்களை நாளை நண்பகல் 12-00 மணிக்குள் செயலாளரிடம் சேர்ப்பிக்க வேண்டுமென்பதையும் மீண்டும் நினைவுகூர விரும்புகிறேன். பேரவை நிகழ்ச்சிகள் இன்று இத்துடன் முடிகின்றன. பேரவை மீண்டும் நாளை மறுநாள், புதன்கிழமை 3—7—1991 ஆம் நாளன்று 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை 13.08 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

2. பேரவை முன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

எதுவுமில்லை.

---

* 'உளமார' என்று உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்கள்.
† ஆங்கிலத்தில் உறுதிமொழி எடுத்துக்கொண்டவர்கள்.